**ஜூலை 16-ல் விவசாயிகள் குறைதீர்க் கூட்டம்**

First Published : 13 Jul 2010 09:54:03 AM IST

விருதுநகர், ஜூலை 12: விருதுநகர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க் கூட்டம் ஜூலை 16-ம் தேதி ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

இதில் விவசாயிகள் தங்கள் குறைகளைத் தெரிவிக்கலாம். கூடடத்துக்கு மாவட்ட ஆட்சியர் வே.க. சண்முகம் தலைமை வகிக்கிறார் என்று அரசு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஜூலை 16-ல் விவசாயிகள் குறைதீர்க் கூட்டம்**

First Published : 13 Jul 2010 09:54:03 AM IST

விருதுநகர், ஜூலை 12: விருதுநகர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க் கூட்டம் ஜூலை 16-ம் தேதி ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

இதில் விவசாயிகள் தங்கள் குறைகளைத் தெரிவிக்கலாம். கூடடத்துக்கு மாவட்ட ஆட்சியர் வே.க. சண்முகம் தலைமை வகிக்கிறார் என்று அரசு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மரக்கன்றுகள் நடும் விழா**

First Published : 14 Jul 2010 04:49:32 AM IST

உளுந்தூர்பேட்டை, ஜூலை 13: உளுந்தூர்பேட்டை வட்டம் களமருதூர் அரிமா சங்கம், சிதம்பரம் காஸ்மோபாலிட்டன் அரிமா சங்கம் ஆகியன இணைந்து களமருதூர் அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் 200 மரக்கன்றுகள் நடும் விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு, அரிமா தலைவர் ஜி.சாரங்கப்பாணி தலைமை வகித்தார். பொருளர் ஜே.கே.ஜெயக்குமார் முன்னிலை வகித்தார். மருத்துவர் செல்வி அன்புமணி, வட்டாரத் தலைவர் வீ.அம்பிகாபதி, மாவட்டத் தலைவர்கள் ஏ.ஆர்.பழனியப்பன், எஸ்.சௌந்திரராஜன், என்.ஆனந்தரங்கநாதன், எம்.டி.மனோகரன், எம்.எஸ்.முத்தையா, ஆர்.லோகநாதன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

2-ம் ஆண்டு கல்லூரி வகுப்புகள் தொடக்கம்

செஞ்சி, ஜூலை 13: செஞ்சி ஸ்ரீரங்கபூபதி பொறியியல் கல்லூரியின் 2-ம் ஆண்டு வகுப்புகள் தொடக்க விழா அண்மையில் நடைபெற்றது.

விழாவில், கல்லூரி தாளாளர் வழக்கறிஞர் ஆர்.பூபதி வகுப்புகளை தொடக்கி வைத்து மாணவ, மாணவிகளுக்கு நோட்டுப் புத்தகங்களை வழங்கி சிறப்புரையாற்றினார். செயலர் ஸ்ரீபதி,

இயக்குநர் சாந்திபூபதி மற்றும் பூ.ஷர்மிஸ்ரீ ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி பேராசிரியர்கள் முருகதாஸ், தட்சிணாமூர்த்தி, பி.ஆர்.ஓ.ஜெயலட்சுமி, ஏ.ஓ.சிவராமன், மேலாளர் கே.ராஜமாணிக்கம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**வயல்வெளி விழா**

First Published : 14 Jul 2010 07:38:22 AM IST

கிருஷ்ணகிரி, ஜூலை 13: ஊத்தங்கரை அருகேயுள்ள பசந்தி கிராமத்தில், ஆத்மா திட்டத்தின் கீழ் வயல்வெளி விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு மாவட்ட பட்டு வளர்ச்சித் துறையின் உதவி இயக்குநர் கோலப்பா தலைமை வகித்தார்.

இதில், ஆத்மா திட்டம், பட்டு வளர்ப்பு, பப்பாளி மாவுப்பூச்சியைக் கட்டுப்படுத்துவது, பட்டுக்கூடு கட்டுதலில் நெட்ரிகா தொழில்நுட்பப் பயன்பாடு உள்ளிட்டவை குறித்து விளக்கப்பட்டன.

தொடர்ந்து, பெண் பட்டு விவசாயிகளுக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் கிருஷ்ணகிரியில் 5 மருத்துவமனைகள் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆத்மா திட்டத் தலைவர் சாந்தமூர்த்தி, மத்தூர் வேளாண் உதவி இயக்குநர் பெரியசாமி, மத்திய பட்டு வாரிய விஞ்ஞானிகள் மாசிலாமணி, பாலசரஸ்வதி, அங்காடி அலுவலர் ரவிஞானம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**பயறுவகை சாகுபடியை மேம்படுத்த ரூ.1.09 கோடி மானியம்**

First Published : 14 Jul 2010 07:35:14 AM IST

கிருஷ்ணகிரி, ஜூலை 13: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் பயறு வகை சாகுபடியை மேம்படுத்த ரூ.1.09 கோடி மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் வி.அருண் ராய் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மாவட்டத்தில் பயறு வகைகள் சராசரியாக ஆண்டுக்கு 66,900 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. இவை பெரும்பாலும் மானாவாரியாகவும், சிறுதானியங்கள் நிலக்கடலை, மா போன்ற பயிர்களில் ஊடு பயிராகவும் சாகுபடி செய்யப்படுகின்றன.

அடியுரம், உயிர்உரம் மற்றும் பூஞ்சன விதை நேர்த்தி, இலைவழி டீஏபி தெளிப்பு ஆகியன கடைபிடிக்காததால் விளைச்சல் குறைகிறது. பயறு வகைப் பயிர்கள் குறைந்த நாள்களில் குறைந்த செலவில் அதிக வருவாய் அளிக்கக் கூடியவை.

இதன் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டும், விவசாயிகளின் வருவாயை அதிகரிக்கவும், நடப்பாண்டில் பயறு வகைகளின் பரப்பை 94,900 ஹெக்டேராக
அதிகரிக்கவும், உற்பத்தியை 60,193 டன்னாக உயர்த்தவும் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் திட்டமிட்டுள்ளது.
மாவட்டத்தில் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் (பயறு வகை) திட்டத்தில் கைத் தெளிப்பான், நீர்ப் பாசன வசதி, பவர்டில்லர், மொபைல் தெளிப்பான் என மானியங்கள் வழங்கப்பட உள்ளன.
மேலும் விவரங்களுக்கு அருகாமையில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களை விவசாயிகள் அணுகலாம்.

**மழையில் நனைந்து உணவு தானியம் நாசம்: இந்திய உணவுக் கழக அதிகாரிகள் மீது கிரிமினல் நடவடிக்கை**

First Published : 14 Jul 2010 12:51:07 AM IST

புதுதில்லி, ஜூலை 13: உத்தரப் பிரதேசத்தில் திறந்தவெளியில் உணவு தானியங்களை குவித்து மழையில் நனையவிட்டு நாசம் செய்ததற்காக இந்திய உணவுக்கழக அதிகாரிகள் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய வேளாண்துறை அமைச்சர் சரத் பவார் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் நிருபர்களிடம் கூறியதாவது: உணவுத ôனியங்களை கொள்முதல் செய்யும்போது அவற்றை பொறுப்பாக சேமித்து வைப்பது இந்திய உணவுக்கழக அதிகாரிகளின் கடமையாகும். ஆனால் உத்தரப்பிரதேசத்தில் மழைக்காலத்தில் கொள்முதல் செய்யப்பட்ட நெல்,கோதுமை போன்ற உணவு தானியங்களை திறந்தவெளியில் குவித்து மழையில் நனையவிட்டுள்ளனர். இதில் ஏராளமான உணவு தானியங்கள் நாசம் அடைந்தன. குறைந்தது அவற்றின் மீது தார்பாலின் போட்டு மூடியிருந்தாலும் பாதுகாத்திருக்கலாம்.
இந்த விவகாரம் தொடர்பாக பலமுறை இந்திய உணவுக்கழக தலைவரிடம் பேசினேன். தவறுக்குக் காரணமானவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தினேன். ஆனால், நடவடிக்கை எடுக்கவில்லை.
எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்படும்.
உத்தரப்பிரதேசத்தின் சில இடங்களில் உணவு தானியங்கள் பாதுகாப்பான முறையில் சேமித்து வைக்கப்படவில்லை. மழைக்காலம் என்பதால் குறைந்தபட்சம் தானியக் குவியல் மீது தார்பாலினையாவது போர்த்தி மூடவேண்டும் என்றார் சரத் பவார்.
மழையில் நனைந்ததால் உத்தரப் பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான டன் கோதுமை வீணானதாக செய்திகள் அண்மையில் வெளியானது.

இந்தியாவில் உணவு தானியங்களை சேமித்து வைக்க போதிய கிடங்கு வசதி இல்லை. இதனால் உணவு தானியங்கள் கெட்டுப்போவது தொடர்கதையாகவே உள்ளது. அரசு மூலம் கொள்முதல் செய்யப்படும் உணவு தானியங்களை பாதுகாப்பாக சேமித்து வைத்தால் மட்டுமே எதிர்காலத் தேவைக்கும் பொது விநியோகத் திட்டம் மூலம் பயனாளிகளுக்கு வழங்கவும் முடியும்.
இந்தியாவில் சுமார் 140 லட்சம் டன் உணவு பொருள்களை சேமித்து வைக்கவே கிடங்கு வசதி உள்ளது. இது போதாது. எனவே கூடுதல் சேமிப்பு கிடங்குகளை அமைக்க முதலீடு செய்யும்படி தனியார் அமைப்புகளுக்கு அரசு அழைப்பு விடுத்து வருகிறது.
2006-07ல் 3.9 கோடி டன் கோதுமை, அரிசியை அரசு கொள்முதல் செய்தது. 2007-08ல் 5 கோடி டன்னும், 2008-09ல் 6.04 கோடி டன் அளவுக்கும் கொள்முதல் செய்யப்பட்டது.

## "9% பொருளாதார வளர்ச்சி சாத்தியமே': பிரணாப் முகர்ஜி

First Published : 14 Jul 2010 12:00:00 AM IST



மும்பை, ஜூலை 13: நடப்பு நிதி ஆண்டில் 9 சதவீத பொருளாதார வளர்ச்சியை எட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதை எட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார். கடந்த நிதி ஆண்டில் (2009-10) பொருளாதார வளர்ச்சி 7.4 சதவீதமாக இருந்தது.
தற்போதைய சூழலில் இது ஒன்றும் சாத்தியம் அல்லாத இலக்கு அல்ல. இதை நிச்சயம் எட்ட முடியும் என்று அவர் மேலும் கூறினார். தில்லியில் செவ்வாய்க்கிழமை யுடிஐ ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் அவர் மேலும் கூறியது: கடந்த ஒன்றரை ஆண்டுகளில் இந்தியா மிகப் பெரும் சிக்கலை எதிர் கொண்டது. அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வு, சர்வதேச சந்தையில்

பெட்ரோலியப் பொருள்கள் விலை உயர்வு, சர்வதேச பொருளாதார தேக்க நிலை ஆகியவற்றோடு நாட்டின் பல பகுதிகளில் ஏற்பட்ட வறட்சியும் பெரும் பிரச்னையாக உருவெடுத்தது. அரசு, ரிசர்வ் வங்கி ஆகியன உரிய நேரத்தில் நடவடிக்கை எடுத்த போதிலும் அதை திறம்பட செயல்படுத்தியதில் தொழிலதிபர்கள், அதிகாரிகளுக்கு முக்கிய பங்கு உண்டு. இதனால்தான் இத்தகைய சிரமத்திலிருந்து மீண்டு வர முடிந்தது.

சர்வதேச தேக்க நிலை மிக மோசமான தாக்கத்தை ஏற்படுத்திய போதுதான் இந்தியாவில் செப்டம்பர் 2008-ம் ஆண்டிலிருந்துதான் சரிவு ஏற்படத் தொடங்கியது.

இதனால் 2008-09-ம் நிதி ஆண்டில் பொருளாதார வளர்ச்சி 6.7 சதவீதமாக சரிந்தது. பொருளாதார தேக்க நிலையிலிருந்து மீள்வதற்கு அரசு அளித்த வரிச் சலுகை காரணமாக தொழில் நிறுவனங்கள் சரிவிலிருந்து மீண்டன. இதனால் கடந்த நிதி ஆண்டில் பொருளாதார வளர்ச்சி 7.4 சதவீதமாக முன்னேறியது. வரிச் சலுகை பகுதியளவில் திரும்பப் பெறப்பட்ட போதிலும் நடப்பு நிதி ஆண்டில் 8.5 சதவீத வளர்ச்சி இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும் இது மேலும் உயர்ந்து 9 சதவீதத்தை எட்டுவதற்கான வாய்ப்பு உள்ளது என்றார்.

உரங்களின் விலை: விவசாயிகள் நலனைக் கருத்தில் கொண்டு உரங்களின் விலையைக் கட்டுக்குள் வைப்பதற்கான நடவடிக்கையை அரசு தொடர்ந்து மேற்கொண்டுள்ளது. கடந்த ஏப்ரலில் இருந்து ஊட்டச்சத்து உரங்களுக்கு மானியம் அளிக்கும் முறையை அரசு அமல்படுத்தியுள்ளது. பாஸ்பேட், பொட்டாஷ் உரங்களின் விலை மீதான கட்டுப்பாடு தளர்த்தப்பட்டது. யூரியா விலை கட்டுக்குள் வைக்கப்பட்டுள்ளது என்றார் பிரணாப்.

யூரியா விலை டன்னுக்கு ரூ. 4,830-லிருந்து ரூ. 5,310 ஆக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தினமலர்

**முட்டத்தூர் பகுதி விவசாயிகள் தொடர் சாதனை:2,000 ஏக்கர் பரப்பில் கம்பு சாகுபடி**

செஞ்சி:கம்பு சாகுபடியில் முட்டத் தூர் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் தொடர்ந்து சாதனை படைத்து வருகின்றனர்.இந்தியாவில் உள்ள மாநிலங்களில் உலக தரம் வாய்ந்த தேயிலை முதல் குறைந்த விலைக்கு விற்கப்படும் வெள்ளரிக்காய் வரை சாகுபடி செய்வதற்கு ஏற்ற மண் வளத்தை கொண்ட பொன் விளையும் பூமியாக தமிழகம் திகழ்கிறது.தமிழர்களின் கடின உழைப்பும், பாரம்பரிய விவசாய முறையும் உணவு உற்பத்தியில் நமக்கு கவுரவமான இடத்தை கொடுத்துள்ளது. மண்ணின் தன்மைகளை ஒட்டி பயிர் செய்வதில் தமிழக விவசாயிகள் கை தேர்ந்தவர்களாக மாறியுள்ளனர்.

விழுப்புரம் மாவட்டம் முட் டத்தூர் மற்றும் இதை சுற்றி உள்ள மண்டகப்பட்டு, நகர், நங்காத்தூர், கொளத்தூர், மாத் தூர் திருக்கை விவசாயிகள் கம்பு சாகுபடியில் தொடர்ந்து சாதனை படைத்து வருகின்றனர்.இந்த ஆறு கிராமத்திலும் ஒவ்வொரு பருவத்திலும் 2,000 ஏக்கர் அளவிற்கு கம்பு சாகுபடி செய்கின்றனர். வீரியரக கம்பு இந்த பகுதி மண்ணிற்கு நல்ல விளைச்சலை தருகின்றது. ஜூலை மாத இறுதியில் மானாவாரி ரகங்களை விதைக்கின்றனர். மற்ற பருவத்தில் இரவை ரகங்களை விதைக்கின்றனர்.தூவல் முறையில் கம்பை விதைக்கின்றனர். அதிக தண்ணீர் செலவு இல்லை. களை எடுக்கவும், அறுவடைக்கும் குறைந்த அளவு ஆட்கள் போதுமானது. பூச்சி தாக்குதல் அதிகளவில் இருப்பதில்லை.

கம்பு விளைந்து அறுவடைக்கு தயார் நிலையில் இருக்கும் போது குருவி கூட்டத்தினால் மகசூல் குறையும். முட்டத்தூர் பகுதியில் அதிக பரப்பளவில் கம்பு சாகுபடி செய்வதால் குருவிகளாலும் பெரிய அளவில் நஷ்டம் ஏற்படுவதில்லை.பல வகையில் காணப்படும் சாதகமான அம்சங்களுடன், முட்டத்தூர் விவசாயிகளின் அனுபவமும் சேர்ந்து ஏக்கருக்கு 20 முதல் 25 மூட்டை வரை மகசூல் கிடைக்கின்றது.தீவிர அறுவடை நாட்களில் தொடர்ந்து ஒரு மாதம் வரை நாள் ஒன்றுக்கு 60 முதல் 70 டன் வரை இப்பகுதியில் இருந்து கம்பு விற்பனைக்கு வருகிறது. அப்போது விழுப்புரம், பண்ருட்டி பகுதி வியாபாரிகள் நேரடியாக வந்து விவசாயிகளிடம் கம்பு கொள்முதல் செய்கின்றனர்.

அதிக அளவிளான கம்பு கோழி தீவனத்திற்கு ஏற்றுமதி செய்கின்றனர். கம்பின் ஈர பதத்திற்கு ஏற்ப தற்போது 1,050 ரூபாய் முதல் 950 ரூபாய் வரை விலை போகிறது. வரத்து அதிகரித்திருப்பதால் சற்று விலை குறைந்திருப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர்.சில மாதங்களுக்கு முன்பு கடுமையாக இருந்த கோடை வெயிலின் போது ஏரிகளும், கிணறுகளும் வறண்டு விழுப்புரம் மாவட்டத்தில் பல பகுதி நிலங்கள் கரம்பாக இருந்தன. இதே காலத்தில் முட்டத்தூர் விவசாயிகள் குறைந்த தண் ணீரை கொண்டு கம்பு சாகுபடி செய்திருந்தனர். அப்போதைய விதைப்பு முட்டத்தூர் விவசாயிகளுக்கு இப்போது கை கொடுத்துள்ளது. தீவிர அறுவடையில் இருக்கும் இவர்கள் அடுத்து மானாவாரி கம்பு விதைப்பிற்கு தயாராகி வருகின்றனர்.கம்பு உற்பத்தியில் இவர்கள் காட்டும் ஆர்வத்தினால் முட்டத்தூர் விவசாயிகள் தொடர்ந்து சாதனை படைத்து வருகின்றனர்.

### 4,500 கிலோ மாம்பழம் அழிப்பு

கள்ளக்குறிச்சி:கள்ளக்குறிச்சி பழக்கடைகளில் செயற்கையாக பழுக்க வைத்த மாம்பழங் களை சுகாதாரத்துறையினர் கைப்பற்றி அழித்தனர்.கள்ளக்குறிச்சி சுகாதார மாவட்ட துணை இயக்குனர் கீதா உத்தரவின் பேரில் பழக்கடைகளில் சோதனை மேற்கொள்ளப் பட்டது. கள்ளக்குறிச்சி நகரில்

உள்ள பழக்கடைகளில் வட்டார சுகாதார ஆய் வாளர்கள் நல்லமுத்து, சேகர், தாமரைச்செல்வன் தலைமையிலான குழுவினர் நேற்று காலை திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.பழக்கடைகளில் செயற்கை முறையில் பழுக்க வைக்கப்பட்டிருந்த நான்கரை டன் மாம் பழங்களை கைப்பற்றினர். இவற்றை கோமுகி ஆற்று ஓரத்தில் பள்ளம் வெட்டி அதில் கொட்டி அழித்தனர்.

**செயற்கை முறையில் பழுக்க வைத்த 290 கிலோ மாம்பழங்கள் பறிமுதல்**

திருக்கோவிலூர்:திருக்கோவிலூர் கடை வீதியில் சுகாதாரத் துறை அதிகாரிகள் நடத்திய சோதனையில் செயற்கை முறையில் பழுக்க வைத்திருந்த 290 கிலோ மாம்பழங்கள் பறிமுதல் செய்து, அழிக்கப் பட்டது.திருக்கோவிலூர் பகுதியில் செயற்கை முறையில் பழுக்க வைக்கப்படும் மாம்பழங்கள் விற்கப்படுவதாக சுகாதாரத் துறை அதிகாரிகளுக்கு புகார்கள் கிடைத்தது. அதன் பேரில் முகையூர், இருவேல்பட்டை சேர்ந்த சுகாதாரத் துறை ஊழியர்கள் நேற்று திருக்கோவிலூர் கடை வீதியில் திடீர் சோதனை மேற்கொண்டனர்.

இதில் செயற்கை முறையில் பழுக்க வைக்கப் பட்டிருந்த 290 கிலோ மாம்பழங்கள் பறிமுதல் செய்யப்பட்டது. இவை அனைத்தும் பேரூராட்சி துப்புரவு ஊழியர்கள் மூலம் கொண்டு சென்று பாதுகாப்பாக அழிக்கப்பட்டது.ஆய்வின்போது டாக்டர் சிவக்குமார், உணவு ஆய் வாளர் சரவணன், வட்டார சுகாதார மேற்பார்வையாளர் முருகன், இளங்கோவன், வேல்பாரி, மகபூப் பாஷா மற்றும் சுகாதாரத் துறை ஊழியர்கள் உடனிருந்தனர்.

**பட்டுப்புழு வளர்ப்பு விழிப்புணர்வு கூட்டம்**

செங்கல்பட்டு: செங்கல்பட்டு அடுத்த ஆனூர் கிராமத்தில், ஆனூர் கிராம முன்னேற்ற அறக்கட்டளை மற்றும் தமிழ்நாடு பட்டு வளர்ச்சித்துறை சார்பில், பட்டுப்புழு வளர்ப்பு குறித்த விழிப்புணர்வு கூட்டம் நடந்தது. அறக்கட்டளை தலைவர் தேவராஜன் தலைமை தாங்கினார். நிர்வாகிகள் விஜயராகவன், கஜேந்திரன், வெங்கடேசன், விஜயகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் தமிழ்நாடு பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குனர் சந்திரசேகரன், அலுவலர்கள் செல்வமணி, கார்த்திகேயன் ஆகியோர் பட்டுப்புழு வளர்ப்பு, அதன் மூலம் கிடைக்கும் வருமானம், அரசு வழங்கும் மானியம், அதை விற்பனை செய்வது குறித்து விளக்கமாக எடுத்துரைத்தனர். பட்டுப்புழு வளர்ப்பின் மூலம் பயனடைந்த அச்சிறுபாக்கத்தை சேர்ந்த விவசாயி செல்லவேல் பட்டுப்புழு வளர்ப்பதன் மூலம், தன் வாழ்க்கையில் ஏற்பட்ட வளர்ச்சியை பகிர்ந்து கொண்டார். பட்டுப்புழு வளர்க்க விரும்பும் விவசாயிகளை பட்டுப்புழு வளர்க்கும் இடத்திற்கே நேரில்

அழைத்து சென்று உற்பத்தியாளர்களுடன் கலந்துரையாட ஏற்பாடு செய்வதாக, உதவி இயக்குனர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

**பலத்த மழை: விவசாயிகள் மகிழ்ச்சி**

பள்ளிப்பட்டு: நேற்று முன்தினம் பெய்த மழையால், ஏரி, குளங்களில் தேங்கிய நீரால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். வங்கக்கடலில் ஏற்பட்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, தமிழகத்தில் 4 நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் மாலை முதல் நள்ளிரவு வரை சென்னை, திருவள்ளூர் மாவட்டத்தில் திருத்தணி, பள்ளிப்பட்டு, ஆர்.கே.பேட்டை மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் அதிகளவு மழை பெய்தது.

இந்த மழையினால் விவசாய நிலங்களில் அதிகளவு மழைநீர் தேங்கியுள்ளது. இதில் பள்ளிப்பட்டு பகுதியிலுள்ள விவசாய நிலங்களில் நெற்கதிர்கள் விடும் நிலையில் உள்ள நெற்பயிர்கள் சாய்ந்து மழைநீரில் மூழ்கின. கரும்பு பயிரிடப்பட்டுள்ள நிலங்களில், ஒரு வாரத்திற்கு தேவையான தண்ணீர் வயல்களில் நிறைந்துள்ளது. ஆழ்துளை கிணறுகளில் தண்ணீர் மட்டம் உயர்ந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஏரி, குளங்களில் தண்ணீர் தேங்கியுள்ளது.

காஞ்சியில் மழை: காஞ்சிபுரம் முழுவதும் நேற்று முன்தினம் இரவு பரவலாக மழை பெய்தது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக அவ்வப்போது மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் இரவு மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. நேற்று காலை 7 மணி நிலவரப்படி, அதிகபட்சமாக காஞ்சிபுரத்தில் 40.7 மில்லி மீட்டர் மழை பதிவானது. அதற்கு அடுத்தபடியாக ஸ்ரீபெரும்புதூரில் 36.3, திருக்கழுக்குன்றத்தில் 33.4, செங்கல்பட்டில் 27, உத்திரமேரூரில் 16, செய்யூரில் 12, மதுராந்தகத்தில் 11, தாம்பரத்தில் 1.6 மில்லி மீட்டர் மழை பதிவானது.

**மண்புழு உரங்களை பயன்படுத்தினால் செலவு குறையும்: விஞ்ஞானி யோசனை**

பட்டுக்கோட்டை: பட்டுக்கோட்டை அடுத்த நம்பிவயல் கிராமத்தில் ஏற்படுத்தப்பட்ட மண்புழு உர உற்பத்தி கிடங்கில் வயல்தின விழா கொண்டாடப்பட்டது. நம்பிவயல் பஞ்சாயத்து தலைவர் சுப்ரமணியன் தலைமை வகித்தார். உகந்த கழிவுகள், மண்புழுக்களின் தன்மைகள், புழு வகைகள் மற்றும் மண்புழு உர உற்பத்திக்கான இடத்தை தேர்வு செய்தல் பற்றி விவசாயிகளுக்கு விரிவான பயிற்சி அளித்தார். வேளாண் பல்கலைக்கழக இணைப் பேராசிரியர் மோகன்தாஸ் பேசுகையில், ""மண் புழுக்களை பயன்படுத்துவதால் சுற்றுப்புறச்சூழல் தூய்மையானதாக காக்கப்படும். பயிர் உற்பத்தி திறன் அதிகரிக்கும். நிலம், நீர் மற்றும் காற்று மாசுபடாமல் இருக்க வாய்ப்புள்ளது.

""மண்புழு உரம் தயாரிக்கும் இடம், பனி, வெயில், மழை படாதபடியும் நிழலான இடத்தை தேர்ந்து எடுக்க வேண்டும். மண் புழுக்கள் விவசாயிகளின் உற்ற நண்பனாகவும், இயற்கைகளை வெட்டியாகவும் இருப்பதால் விவசாயிகள் தங்கள் நிலங்களில் மண்புழுக்களின் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் தொழில்நுட்பங்களை கையாள வேண்டும். இதற்கான செலவு பிற உரங்களை விட குறைவு," என்றார்.பயிற்சியில், நம்பிவயல் கிராமத்தை சேர்ந்த முன்னோடி விவசாயிகள் 50க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். ஏற்பாடுகளை அக்னியாறு கோட்ட முதுநிலை ஆராய்ச்சியாளர்கள் நவீன் சேவியர், பாலசந்தர் ஆகியோர் செய்திருந்தனர்.

**சோலையாறு அணை நீர்மட்டம் 82 அடியாக உயர்வு**

வால்பாறை:வால்பாறையில் மழைப்பொழிவு குறைந்த நிலையிலும் சோலையாறு அணையின் நீர்மட்டம் நேற்று காலை 82 அடியாக உயர்ந்தது.வால்பாறையில் பெய்துவரும் பருவ மழையினால் பி.ஏ.பி.திட்டத்தின் சோலையாறு அணை, தொகுப்பு அணைகளான மேல்நீராறு, கீழ் நீராறு, அப்பர் ஆழியாறு மற்றும் காடம்பாறை அணைகளின் நீர்மட்டம் உயர்ந்தது.இந்நிலையில் கடந்த ஒரு வாரமாக வால்பாறையில் தென்மேற்குப்பருவ மழை குறைந்து காலையில் வெய்யிலும், மாலையில் சாரல் மழையும் பெய்து வருகிறது. இதனால் அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தண்ணீர் வரத்து குறைவதோடு, அணைகளின் நீர்மட்டமும் குறைந்து வருகிறது.கடந்த ஆண்டு ஜூலை மாதம் 17ம் தேதி நள்ளிரவு 160 அடி கொள்ளவு கொண்ட சோலையாறு அணை நிரம்பியது. இதனையடுத்து சேடல் டேம் வழியாக பரம்பிக்குளத்திற்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

ஆனால் இந்த ஆண்டு தென்மேற்குப்பருவ மழை குறைந்து வருவதால் அணை நிரம்புவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. மழைப்பொழிவு குறைந்த நிலையிலும் சோலையாறு அணையின் நீர்மட்டம் நேற்று 82.35 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 974 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. அணையிலிருந்து மானம்பள்ளி பவர் ஹவுஸ் வழியாக பரம்பிக்குளத்திற்கு விநாடிக்கு 835 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.வால்பாறையில் நேற்று காலை 8.00 மணி வரை பதிவான மழையின் அளவு (மில்லி மீட்டரில்) சோலையாறு - 10, வால்பாறை - 2, மேல்நீராறு - 4, கீழ்நீராறு - 13 .

**ஆக்ஷன் கம்பெனிக்கு ஏலக்காய் வரத்து சரிவு**

கம்பம்: ஸ்பைசஸ் போர்டின் ஆக்ஷன் கம்பெனிக்கு ஏலக்காய் வரத்து குறைந் துள்ளது. விலையிலும் பெரிய அளவில் மாற்றமில்லை. கம்பம்மெட்டு அருகே உள்ள புத்தடியில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஸ்பைசஸ் போர்டின் ஆக்ஷன் ஹாலில் கே.சி.பி.எம்.சி., ஆக்ஷன் கம்பெனியின் முதலாவது ஆக்ஷன் துவங்கியது. கே.சி.பி. எம்.சி.,யின் பொதுமேலாளர் பி.சி.புண்ணூஸ்

தலைமை வகித்தார். இணை நிர்வாக இயக்குநர் கே.ஜியாவுதீன் அகமது முன்னிலை வகித்தார். இயக்குநர் அருணன் வரவேற்றார். ராம்கோ குரூப் சேர்மன் பி.ஆர்.ராமசுப்ரமணியராஜா குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். மும்பை, விருதுநகர், சென்னை, பெங்களூர், போடி உட்பட பல நகரங்களில் இருந்து வியாபாரிகள் கலந்து கொண்டு ஏலக்காயை கொள்முதல் செய்தனர். முதலாவது ஆக்ஷனில் 12 ஆயிரத்து 500 கிலோ மட்டுமே விற்பனைக்கு வந்தது.

அதிகபட்ச விலையாக கிலோவிற்கு ஆயிரத்து 755 ரூபாய், சராசரி விலையாக ஆயிரத்து 570 ரூபாய், குறைந்தபட்ச விலையாக ஆயிரத்து 7 ரூபாய் கிடைத்தது. விலையை பொறுத்தவரை பெரிய அளவில் மாற்றம் இல்லை. ஆனால் ஏலக்காய் வரத்து மிகவும் குறைவாக இருப்பதாக ஆக்ஷன் கம்பெனியின் நிர்வாகிகள் தெரிவித்தனர். கடந்த சீசனில் துவக்கத்தில் 25 ஆயிரம் கிலோ வரை பதிவானது குறிப்பிடத்தக்கது. ஆக்ஷன் துவக்க நிகழ்ச்சியில் கே.சி.பி.எம்.சி. ஆக்ஷன் கம்பெனியின் இயக்குநர்கள் உதயக்குமார், டி. சிவக்குமார், குகன், ஏல விவசாயி பொன்குமரன், சக்திசுப்ரமணியன் உட்பட பலர் கலந்து கொண்டனர். முதலாவது ஆக்ஷனிற்கான ஏற்பாடுகளை கம்பெனியின் மண்டல மேலாளர் அன்பழகன், ஆக்ஷன் மேனேஜர் பாபு செய்திருந்தனர்.

**உயர்ந்தது தக்காளி விலை சரிந்தது முருங்கை விலை**

தேவாரம்: தேவாரம் மார்க் கெட் டில், தக்காளி அதிகரித்து முருங்கை விலை குறைந் துள்ளது.ஆந்திராவில் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால், சென்னை, திருச்சி உள்ளிட்ட நகரங்களுக்க வரும் தக்காளி வரத்து குறைந் துள்ளது. தேவாரம் பகுதியில் விளையும் தக்காளி சேதமடையாமல் உள்ளதால் தற்போது நல்ல விலை கிடைத்து வருகிறது. ஒரு பெட்டி(15 கிலோ) அதிகபட்டசமாக 450 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. காய்கறிகள் விலை விபரம்(கிலோவில்): பீன்ஸ் எடுப்பு துவங்கியுள்ள நிலையில் ஒரு கிலோ அதிகபட்சமாக 15 ரூபாய்க்கு விற்பனையாகிறது. தட்டைப்பயிறு 12 ரூபாய், சீனி அவரை 6 ரூபாய், புடலை 8 ரூபாய், அவரைக்காய் 15 ரூபாய், பீட்ரூட் 10, கத்தரிக்காய் 10, பச்சைமிளகாய் 20, முள் ளங்கி 6, வெண்டிக் காய் 8 ரூபாய்க்கும் விற்பனையாகிறது. முருங்கைக்காய் கிலோ ரூ.20 க்கு விற் றது, தற்போது விலை குறைந்து கிலோ ரூ.8 க்கு விற்பனையாகிறது.

**களை கொல்லிகளை அகற்ற புதிய வழி : மஞ்சூர் விவசாயிகள் கடைபிடிப்பு**

மஞ்சூர் : தேயிலை செடிகளில் இடையே வளர்ந்து வரும் களை கொல்லிகளை அகற்ற புதிய முறை கடை பிடிக்கப்பட்டு வருகிறது.மஞ்சூர் சுற்றுவட்டார பகுதிகளில் பெரும்பாலும் தேயிலை விவசாயம் பிரதான தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தேயிலை விலை வீழ்ச்சி ஏற்பட்ட போது பெரும்பாலானவர்கள் வேலை வாய்ப்புகளை தேடி வெளியூருக்கு சென்றனர். இதையடுத்து தேயிலை தோட்டங்களை பராமரிக்க வேலைக்கு ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டது.வேறு

வழியின்றி அதிகப்படியான கூலி கொடுத்து வேலைக்கு ஆட்களை அமர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டது. தேயிலை தற்போது போதிய விலை கிடைக்காத நிலையில் இது விவசாயிகளுக்கு சிரமத்தை ஏற்படுத்தியது. இந்நிலையில், தேயிலை செடிகளுக்கு இடையே வளர்ந்து வரும் களை கொல்லியை களைய போதுமான ஆட்கள் கிடைப்பதில்லை.

களை கொல்லியை களைந்து தோட்டங்களை பராமரிக்க முடியாத நிலை ஏற்பட்டது. மேலும் "ரவுண்ட் அப்' என்னும் மருந்தை தண்ணீரில் கலந்து செடிகளுக்கு இடையே வளர்ந்துள்ள களை கொல்லிக்கு தெளிக்கப்பட்டு வருகிறது. இந்த மருந்தின் விலை 300 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஒரு ஏக்கர் களை கொல்லியை அழிக்க 500 ரூபாய் முதல் 600 ரூபாய் வரை செலவிடப்படுகிறது. அதே சமயத்தில் ஆட்களை வைத்து வேலை செய்தால் குறைந்தது 10 ஆட்கள் தேவைப்படுவதுடன் 3000 ரூபாய் வரைக்கு கூலி கொடுக்க வேண்டியுள்ளது.இந்த மருந்தை தெளிப்பதன் மூலம் செலவு மிச்சமாவதுடன், குறைந்தது 5 மாதம் இடைவேளையில் மருந்து தெளிக்க வேண்டும். களை கொல்லிக்கு இந்த மருந்தை தெளிப்பதே பயன் தருவதாக தேயிலை விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

**வேளாண் துறையின் வளர்ச்சிக்கு புதிய திட்டங்கள் வடிவமைப்புகாந்திகிராமத்தில் உதவி இயக்குனர் பேச்சு**

காந்திகிராமம்: எளிமையான திட்ட செயலாக்க முறை,சுலபமான சந்தைப்படுத்தும் வழிமுறைகளை அடிப்படையாக கொண்டு வேளாண்மை வளர்ச்சிக் கான புதிய திட்டங்களை வடிவமைக்க வேண்டும் என தோட்டக்கலை துறை உதவி இயக்குநர் சதாசிவம் காந்திகிராமத்தில் பேசினார். காந்திகிராம பல்கலை., யில் ஐதராபாத் கபார்ட் நிறுவன நிதியுதவியுடன் தொண்டு நிறுவனங்களின் திறன்மேம்பாடு, திட்டங்களை வடிவமைப்பது குறித்தான 3 நாள் பயிற்சி பட்டறை நடக்கிறது. துவக்க விழாவில், வேளாண்மை அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் எஸ்.கே. கோபால் வரவேற்றார். காந்திகிராம அறக்கட்டளை செயலாளர் எம்.ஆர்.ராஜகோபாலன் பயிற்சி பட்டறையை துவக்கி வைத்தார். விழாவில் தோட்டக்கலை துறை உதவி இயக்குநர் சதாசிவம் பேசியதாவது: வேளாண்மையில் புதிய சாகுபடி முறைகள் அறிமுகப்படுத்தும்போது

பெரும்பாலான விவசாயிகள் தயங்குவர். புதிய முறையில் உள்ள சாதகமான அம்சங்கள் குறித்து தெளிவாக விளக்கி கூறி தயக்கத்தை போக்குவது அவசியமாகும். முழுமையாக புரிந்து கொள்ளும் பட்சத்தில் வற்புறுத்த வேண்டி அவசியமின்றி, விவசாயிகள் தாங்களாகவே புதிய சாகுபடி முறைகளை ஏற்று சிறப்பாக செயல்படுத்துவர். வேளாண்மை நடக்கும் பகுதியில் நிலவும் தட்ப

வெப்பம், மண்ணின் தன்மை ஆகியவற்றிற்கு ஏற்ப, ஒரே மாவட்டத்தில் கூட வெவ்வேறு சாகுபடி முறைகள் பின்பற்றப்பட வேண்டும்.வெளிநாடுகளில் செயலாக்கப்பட்ட திட்டமுறைகளை அப்படியே பின்பற்றி நமது நாட்டில் செயலாக்கும் வகையில் புதிய திட்டங்கள் தயாரிக்கும் போக்கினை தொண்டு நிறுவனங்கள் கைவிட வேண் டும்.

பிற நாட்டில் சிறப் பாக செயலாக்கப்பட்ட வேளாண்மை திட்டமாக இருப்பினும், நமது நாட்டின் வேளாண் தன்மைக்கேற்ற மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். விவசாயிகள் சுலபமாக புரிந்து கொள்ளக்கூடிய எளிமையான திட்ட செயலாக்க முறைகள் மற்றும் சுலபமான சந்தைப்படுத்தும் வழிமுறைகளை அடிப்படையாக கொண்டு வேளாண்மை வளர்ச்சிக்கான புதிய திட்டங்களை தொண்டு நிறுவனங்கள் வடிவமைக்க வேண்டும்" என்றார். பல்கலை.,பதிவாளர் நாராயணசாமி, கபார்ட் நிறுவன அதிகாரி விஜய் குமார் ராய், பல்வேறு தொண்டு நிறுவன பிரதிநிதிகள் உட்பட பலர் பங்கேற்றனர். வேளாண் அறிவியல மைய பயிற்சியாளர் பி.பி. சரவணன் நன்றி கூறினார்.

**கொடைக்கானலில் இரண்டாவது சீசன் தோட்டக்கலைத்துறை சிறப்பு ஏற்பாடு**

கொடைக்கானல்: கொடைக்கானலில் இரண்டாவது சீசன் ஆக., 15ல் துவங்குகிறது. இதற்காக தோட்டக்கலைத்துறையினர் சிறப்பு ஏற்பாடுகளை செய்து வருகின்றனர். கொடைக்கானலில் மே மாதம் முழுவதும் பிரையண்ட் பூங்காவில் மலர்க் கண்காட்சி தோட்டக்கலைத்துறை சார்பில் நடத்தப்பட்டது. 80 ஆயிரம் வகையான மலர்கள் இடம் பெற்றன.இதில் மலர் கோபுரம், கிளாஸ் கவுஸ், பசுமை புல்தரை சுற்றுலா பயணிகளை வெகுவாக கவர்ந்தது. கொடைக்கானலில் "ஆப் சீசன்' என அழைக்கப்படும் இரண்டாவது சீசன் ஆக., 15 முதல் அக்., 15 வரை இருக்கும்.கோடை சீசனை போல் சுற்றுலா பயணிகளை கவர்வதற்காக தோட்டக்கலைத்துறையினர் சிறப்பு ஏற்பாடுகளை செய்து வருகின்றனர். தோட்டக்கலைத்துறை கொடைக்கானல் அலுவலர் எபன் ஞானராஜ், உதவி வேளாண் அலுவலர்கள் சாம்பசிவம், செல்வராஜ் கூறியதாவது: பிரையண்ட் பூங்கா 20 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இதில் ஐந்து ஏக்கர் பரப்பளவில் மலர்கள், கிளாஸ் கவுஸ், பசுமை புல் தரை உருவாக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது சீசனை முன்னிட்டு கேலன்டுவா, மெரிகோல்டு, டெல்பீனியம், சால்பியா போன்ற அரிய வகை மலர்ச் செடிகளை நடவு செய்யவுள்ளோம்.ரோஜாப்பூக்கள் அதிகளவு இடம் பெறவுள்ளன.ஏரியில் இருந்து இரண்டு கி.மீ., தொலைவில் உள்ள செட்டியார் பூங்கா ஐந்து ஏக்கர் பரப்பளவு கொண்டது. அதில் ஒரு ஏக்கர் பரப்பளவில் உள்ள பூங்காவில் ஏராளான மலர்கள் இடம் பெறவுள்ளன. இவ்வாறு கூறினர்.

**மல்லிகை விலை அதிகரிப்பு**

மதுரை: மதுரையில் சில வாரங்களாக மல்லிகை பூக்கள் வரத்து அதிகரிப்பால், விலை கிலோ 20 ரூபாய்க்கும், 10 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. இந்நிலையில், வரத்து குறைந்ததால், விலை மீண்டும் அதிகரித்தது. நேற்று கிலோ 120 ரூபாய்க்கு விற்கப்பட்டது. மற்ற பூக்கள் விலை குறித்து, வியாபாரிகள் சங்க தலைவர் சோ.ராமச்சந்திரன் கூறியதாவது : ஒரு கிலோ ரோஜா 40 ரூபாய், அரளி 30,  கனகாம்பரம் 120, மரிக்கொழுந்து 25, செண்டுப்பூ 30, பிச்சிப்பூ 150, முல்லைப்பூ 120 ரூபாய்க்கு விற்கப்பட்டது, என்றார்.

**பன்னீர் திராட்சை கிலோ ரூ.80**

மதுரை: தேனி மாவட்டத்தில் உற்பத்தி குறைந்துள்ளதால், மதுரையில் கிலோ 25 ரூபாய்க்கும் விற்ற பன்னீர் திராட்சை நேற்று 80 ரூபாய்க்கு விற்கப்பட்டது. மற்ற பழங்கள் விலை குறித்து யானைக்கல் வியாபாரி செந்தில் கூறியதாவது: ஒரு கிலோ ஆப்பிள் 100-130 ரூபாய், ஆஸி., கிரேப் 250, சப்பட்டை மாம்பழம் 80, காசாலட்டு மாம்பழம் 60, காபூல் மாதுளை 100, சீட்லெஸ் 80, கொடை ஆரஞ்சு 70, சப்போட்டா 20, பேரிக்காய் 60, பிளம்ஸ் 70, மங்குஸ்தான் 170, துரியன்பழம் 350, பப்பாளி 20, அன்னாசி 25, சாத்துக்குடி 40 ரூபாய்க்கு விற்கப்பட்டது, என்றார்.

**பாமாயில் விலை அதிகரிப்பு ஏன்**

மதுரை: சென்னை, தூத்துக்குடி துறைமுகங்களில் பாமாயில் வரத்து குறைந்துள்ளதால், மதுரையில் மீண்டும் விலை அதிகரித்துள்ளது. எண்ணெய் வியாபாரிகள் சங்க முன்னாள் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது : கடந்த வாரம் 650 ரூபாய்க்கு விற்ற 15 கிலோ டின் பாமாயில் நேற்று 660 ரூபாய்க்கும், ரைஸ்பிரான் ஆயில் 670 ரூபாயில் இருந்து 675 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. கடலை எண்ணெய் 1240 ரூபாயில் இருந்து 1230 ரூபாயாக குறைந்தது. வனஸ்பதி 740 ரூபாய், சூரியகாந்தி எண்ணெய் 800, தேங்காய் எண்ணெய் 990, நல்லெண்ணெய் 1150, தும்பை நல்லெண்ணெய் 1600 ரூபாய் என்பதில் மாற்றமில்லை, என்றார்.

**அரசு டெண்டரால் விலை அதிகரித்த பட்டாணி**

மதுரை: பட்டாணியை கொள்முதல் செய்ய அரசு டெண்டர் விட்டுள்ளதால், இதன் விலையை வியாபாரிகள் அதிகரித்துள்ளனர். மதுரை பருப்பு வியாபாரிகள் சங்க செயலாளர் வெற்றிச்செல்வன் கூறியதாவது : கடந்த வாரம் 1550 ரூபாய்க்கு விற்ற நூறு கிலோ பட்டாணி பயறு, நேற்று 1650 ரூபாய்க்கும், பருப்பு 1850லிருந்து 1900க்கும் விற்கப்பட்டது. உளுந்தம் பயறு கடந்த வாரம் 5300லிருந்து 5500க்கும், இந்த வாரம் 5400லிருந்து 5600க்கும் விற்கப்பட்டது. உருட்டு பயறு 7300 முதல் 7600க்கும், உளுந்தம் பருப்பு 5900 முதல் 6200க்கும் விற்கப்பட்டது.

பாசி பயறு 6400லிருந்து 7000கக்கும், பருப்பு 7400லிருந்து 8200க்கும், கடலை பயறு 2350லிருந்து 2400க்கும், பருப்பு 2900லிருந்து 2950க்கும் விற்கப்பட்டது, என்றார்.

**மானாவாரி விவசாயத்தில் நுண்ணுயிர் உரங்கள் நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 14,2010,00:00 IST



**மானாவாரி விவசாயத்தில் நுண்ணுயிர் உரங்கள்:** ரைசோபியம் - குடும்பத்தைச் சார்ந்த பயிர்களுடன் கூட்டு வாழ்க்கை நடத்தி பயிர்களின் வேர்களில் வேர்முடிச்சுகளை உண்டாக்குகின்றன. இதன்மூலம் பயிர்களும் பாக்டீரியாக்களும் ஒன்றையொன்று சார்ந்து வாழ்கின்றன. ரைசோபியம் பயிர்களுக்கு தேவையான தழைச்சத்தை காற்றிலிருந்து கிரகித்துக் கொடுத்து பயிர்களில் இருக்கும் சத்துக்களை எடுத்துக்கொண்டு வாழ்கிறது. வேர்முடிச்சுக்களை உண்டாக்கும் ரைசோபியம் அனைத்தும் ஒரே வகையைச் சார்ந்தவை அல்ல. ஒரு குறிப்பிட்ட சில பயறு வகைச் செடிகளில்தான் வேர் முடிச்சை உண்டுபண்ணக்கூடியது. உதாரணம் பச்சைப்பயறு, உளுந்து செடிகளில் வேர்முடிச்சுகளை உண்டாக்கும் ரைசோபியம் இனம் அதே தாவர குடும்பத்தைச் சேர்ந்த நிலக்கடலை செடிகளில் கூட்டு சேர்ந்திருப்பதில்லை.

அத்தகைய குறிப்பறிதல் திறனின் அடிப்படையில் ரைசோபியத்தில் 7 வகைகள் உள்ளன. எந்தெந்த ரைசோபியம் இனம் வேர்முடிச்சு உண்டுபண்ணக்கூடியதோ அவற்றை உபயோகப்படுத்த வேண்டும்.

**அசோஸ்பைரில்லம்:** அனைத்து வேளாண் பயிர்களுக்கும் இடலாம் என சிபாரிசு செய்யப் பட்டிருந்தாலும் தானிய பயிர்களில் அசோஸ் பைரில்லத்தின் செயல்பாடு மிக நன்றாக உள்ளது. அசோஸ் பைரில்லம் தழைச்சத்தை கிரகித்து பயிர்களுக்கு கொடுப்பதுடன் பயிர் வளர்ச்சிக்கு தேவையான வளர்ச்சி ஊக்கிகளான இண்டோல் அசிடிக் அமிலம் மற்றும் ஜிப்ரலிக் அமிலம் ஆகியவற்றை உற்பத்தி செய்து பயிர்களின் வேர்களும், தண்டுகளும், இலைகளும் வேகமாக வளர உதவிபுரிகிறது. அசோஸ்பைரில்லம் மண்ணில் அங்கக பொருட்கள் அதிக அளவு இல்லாதபோதிலும் தழைச்சத்தை நிலைப்படுத்தி நன்கு செயல்பட வாய்ப்பு உள்ளது. பாஸ்போ பாக்டீரியா - இடுவதால் பயிரின் வேர்கள் செழித்து வளருகின்றன. திசுக்கள் வளம்பெறுகின்றன. பாறை பாஸ்பேட்டில் உள்ள மணிச்சத்தினை பயிர்கள் எளிதில் ஈர்க்கும் வகையில் மாற்றித்திரும் திறன் கொண்டது. ரசாயன உரத்தேவையில் மணிச்சத்தின் அளவில் 25 சதம் குறைத்துக்கொள்ளலாம்.

**வேர் உட்பூசணங்கள்:** வி.ஏ.எம். மண்ணிலுள்ள மணிச்சத்தினை பயிர்களுக்கு எடுத்துக்கொடுப்பதுடன் கந்தகம், துத்தநாகம் மற்றும் சுண்ணாம்புசத்து ஆகியவற்றை மண்ணிலிருந்து பயிர்களுக்கு எடுத்துக் கொடுக்கிறது. பூசண வேர்த்தூவிகள் மண்ணில் வெகு தூரத்திற்கு சுலபமாக பரவிவிடுகிறது. ஆகவே வேர்கள் பரவமுடியாத தூரத்தில் உள்ள மணிச்சத்தை சல்லடை போட்டு தேடுவதுபோல் தேடிப்பிடித்து உறிஞ்சி, பயிர்களுக்கு கொடுக்கிறது. வேர் உட்பூசணம் மண்ணிலிருக்கும் மணிச்சத்தை கரைக்க ஏதுவான அமிலம் எதையும் உற்பத்தி செய்வதில்லை. ஆகவே அதனுடைய செயல் சுலபமாக கிடைக்கக்கூடிய மணிச்சத்தை சல்லடை போட்டு தேடுவதுபோல் தேடிப்பிடித்து உறிஞ்சி பயிர்களுக்கு கொடுக்கிறது. வேர் உட்பூசணங்கள் வேரைத் தாக்கும் பூஞ்சாண நோய்களிலிருந்து பயிர்களைப் பாதுகாக்கிறது. நுண்ணுயிர் உரங்களை பயன்படுத்த 2 முறைகள் உள்ளன. 1. விதைநேர்த்தி முறை, 2. நாற்றுக்களை நனைத்தல்.

**1. விதைநேர்த்தி:** ஒரு பாக்கெட் 200 கிராம் உரத்தை 200 மி.லி. ஆறிய கஞ்சியுடன் கலந்து ஒரு ஏக்கருக்கு தேவையான விதையுடன் நன்கு கிளறிவிட்டு, 30 நிமிடங்கள் நிழலில் உலர்த்தி, பின்னர் விதைக்கலாம். பயிருக்கு ஏற்ப அசோஸ்பைரில்லம் (அ) ரைசோபியம் நுண்ணுயிர்களை பாஸ்போபாக்டீரியாவுடன் கலந்தே இடுவது நல்லது.

**2. நாற்றுக்களை நனைத்தல்:** 2 பாக்கெட் நுண்ணுயிர் உரத்தை15 லிட்டர் நீரில் கலந்து நாற்றின் வேர்ப்பகுதியை கலவையில் நன்றாக நனைத்து நடவு செய்யலாம். நாற்றுக்களை நனைக்கும்போதும் தழைச்சத்துக்கான உயிர் உரமும் மணிச்சத்துக்கான உயிர் உரமும் கலந்தே

உபயோகிக்கலாம். (தகவல்: உமா சங்கரேஸ்வரி, ரெ.ச.குணசேகரன், வேளாண் நுண்ணுயிர் துறை, தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003)

-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : ஜூலை 14,2010,00:00 IST



**மண்புழு எருவினை பிரித்தெடுக்கும் முறை:** மண்புழு உற்பத்தி முறைகள் - தொட்டிமுறை, குழி முறை, படுக்கை முறை. நன்கு மக்கிய பயிர்க்கழிவுகள் மற்றும் சாணத்தை மண்புழுவிற்கு உரமாக தருவதால் ஒரு மாதத்திலேயே மண்புழு எருவினை எடுத்து பயன்படுத்தலாம். அதே சமயம் பாதியளவு மக்கிய, சரியாக மக்காதநிலையில் உள்ள பொருட்களை உணவாக்கி கொடுத்தால் 2 மாதங்கள் கழித்துத் தான் மண்புழு எருவினைப் பெறமுடியும். மண்புழு எருவினை சேகரிக்க முடிவு செய்தவுடன் தொட்டியில் நீர் தெளிப்பதை 2, 3, நாட்கள் நிறுத்தி வைக்க வேண்டும். மண்புழுக்கள் ஈரம் மிகுந்த அடிப்பகுதிக்குச் சென்றுவிடும். இச்சமயத்தில் நாம் மேலே பரப்பியுள்ள சிறுசிறு செங்கற்களின் இடையிடையே காணப்படும் மண்புழுவின் குருணை வடிவ கழிவுகளை சேகரிக்க வேண்டும். இக்கழிவுகளின் மீது நீர் தெளித்து ஈரத் தன்மையை பராமரிக்க வேண்டும். இக்கழிவுகளை நேரடியாக விளைநிலங்களில் இட்டு பயன்படுத்தலாம். மண்புழு எருவினை பைகளில் அடைத்து ஈரம் உலராமல் பாதுகாத்து 6 முதல் 8 மாத காலம் வரை பயன்படுத்தலாம். ஒரு கிலோ எடைக்கு சுமார் 1000 மண்புழுக்கள் இருக்கும். இவை ஒரு நாளில் பயிர்க்கழிவுகளை உண்டு 5-6 கிலோ எருவினைத் தருகின்றன. நன்கு புழுக்களை பராமரித்தால் ஒரு மாதத்திற்கு 150

கிலோ வரை எருவினை பெறலாம். நன்கு வளர்ச்சியடைந்த நிலையில் சுமார் 200 கிலோ வரை எரு கிடைக்கும். கிலோ 6 முதல் 8 ரூபாய் வரை விலை போகும்.

நெல்லுக்கும் சொட்டுநீர் பாசனம் அமைத்து அசத்திக் கொண்டிருப்பவர் சேலம் மாவட்டம், நாகியம்பட்டி அப்புத்தோட்டம் கே.கருப்பணன் என்ற விவசாயி. ஏற்கனவே விவசாயி தன்னிடம் இருந்த சொட்டுநீர்க் குழாய்களை வைத்து 70 சென்ட் நிலத்தில் ஏ.டி.டி.45 ரக நெல்லுக்குதானே சொட்டுநீர் அமைத்துள்ளார். நிலத்தில் பல பயிர் சாகுபடி செய்து அவையெல்லாம் பூத்து வந்ததும் மடக்கி உழவு செய்துவிட்டு பின்னர் தொழு உரம் போட்டு பரம்படித்து நிலத்தை சமன்செய்து, நாற்றங்கால் மூலம் நாற்று தயாரித்து ஒற்றை நாற்று முறையில் ஒரு அடி இடைவெளியில் கயிறு பிடித்து நாற்று நட்டுள்ளார். பின்னர் 4 அடி இடைவெளிக்கு ஒரு குழாய் (லேட்ரல்) வருவதுபோல் 18 மி.மீ. குழாயை அமைத்து அதில் இரண்டரை அடி இடைவெளியில் ஒரு துளையிட்டு சிறிய குழாயை (மைக்ரோ டியூப்) சொருகிவைக்க வேண்டும். நடவு செய்த ஒரு வாரத்தில் தலா 2 லிட்டர் சூடோமோனாஸ், டிரைகோடெர்மா விரிடி உயிரி பூஞ்சாணத்தை சொட்டுநீரில் கலந்து நிலத்துக்கு கொடுக்க வேண்டும். இதுதவிர வேறு எந்த இடுபொருளும் கொடுக்கவில்லை. கோனோவீடரை கிழக்கு மேற்காக மட்டும் உருட்டி களை எடுக்க வேண்டும். இப்படிச் செய்வதால் சொட்டுநீர் குழாய்க்கு  எந்த பாதிப்பும் வராது.
விதை முளைத்ததிலிருந்து சுமார் 50 நாட்களில் பூ கரு உருவாகும். அதிலிருந்து 30 நாட்களில் பூ பூக்கும். அதிலிருந்து கதிர் முதிர்ச்சி அடைய 30 நாட்கள் ஆகும். வேர் பிடிக்கும் தருணம், பூக்கரு உண்டாகும் சமயம், பூக்கும் தருணம் நீர் பற்றாக்குறை ஏற்பட்டால் மகசூலில் பெரிய பாதிப்பு இருக்கும். மற்ற சமயங்களில் காய்ச்சலும் பாய்ச்சலும் இருந்தாலே போதுமானது. அரை மணி நேரம் பாய்ந்தாலே நிலம் ஈரமாகிவிடும். வழக்கமான முறையில் ஒரு ஏக்கர் நெல் சாகுபடி செய்வதற்கு தேவைப்படும் தண்ணீரை வைத்து சொட்டு நீர்ப்பாசனம் மூலம் 3 ஏக்கர் சாகுபடி செய்யலாம். வழக்கமான முறையில் 70 சென்டில் 20 மூடை (70 கிலோ) மகசூல் எடுப்பார். சொட்டுநீர் பாசனம் மூலம் கூடுதலாக 9 மூடை நெல் கிடைத்துள்ளது. அறுவடைக்கு அடுத்த நாளே குழாய்களை சுருட்டி வைத்துவிட்டு உழவு ஓட்டிவிடலாம் என்கிறார் விவசாயி.
தொடர்புக்கு: கே.கருப்பண்ணன், 97869 81299 (தகவல்: பசுமை விகடன், 25.6.10)

-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**வில்வமரத்தின் பயன்கள்**

பதிவு செய்த நாள் : ஜூலை 14,2010,00:00 IST



வில்வமரம் ஒரு புனிதமான மரமாகும். இதன் தழை ஈஸ்வரனுக்கு பூஜை செய்ய பயன்படுகிறது. இதன் காய், கனி, வேர் ஆகிய அனைத்தும் நல்ல பலனை நமக்கு கொடுக்கிறது. பெரும்பாலும் வில்வமரம் ஈஸ்வரன் கோயில்களில் உள்ளது. வில்வ இலையுடன் தண்ணீரை கலந்தால் அது புனித நீராக ஈஸ்வரன் கோயில்களில் பயன்படுத்தப் படுகிறது. வில்வமரம் இந்தியாவில்தான் பயிர் செய்யப்படுகிறது. இதற்கு வெப்பம் தேவைப்படுகிறது. எனவே இது இந்தியாவில் முக்கியமாக சிவஸ்தலங்களில் வளர்க்கப் படுகின்றன. இது பாகிஸ்தான், இலங்கை, தாய்லாந்து ஆகிய நாடுகளிலும் வளர்க்கப் படுகிறது. இது சுமார் 10 மீட்டர் அதாவது 30 அடி வரை வளரும் தன்மையுடையது. இதன் இலைப்பகுதிகளில் பூக்கள் மாசி, பங்குனி மாதங்களில் பூக்கும். இதன் பூக்கள் பன்னீர் போன்ற வாசனை உடையதாக இருக்கும். பிறகு இது வில்வ பழமாக மாறும்.

வில்வ பழம்: வில்வ பழத்தில் பல சத்துக்கள் உள்ளன. அவை புரதச்சத்து, தாதுப்பொருள் சத்து, மாவுப்பொருள் சத்து, சுண்ணாம்பு சத்து, கொழுப்புச் சத்துக்கள் உண்டு. மேலும் வைட்டமின் ஈ சத்து, இரும்புச்சத்து, பாஸ்பரஸ், நியாசின் ஆகிய சத்துக்களும் உள்ளன.

வில்வ பழத்தின் பயன்கள்: வில்வ பழத்திலிருந்து ஜாம், ஸ்குவாஷ், சர்பத், சிரப் ஆகியவைகளை தயாரிக்கலாம். கற்கண்டு, மிட்டாய் மற்றும் மிட்டாய்பானங்கள் தயாரிக்கலாம். இதன் குழம்பு வண்ணப் பொடிகளுடன் கலந்து படங்கள் வரைய பயன்படுகிறது. இதன் பழச்சதையை சோப்பு போலும் பயன்படுத்தலாம். பழத்தின் ஓட்டிலிருந்து ஒரு வகையான தைலம் தயாரிக்கலாம். இது வில்வ தைலம் எனப்படுகிறது. இதன் விதைகளிலிருந்து எண்ணெய் அதாவது வேப்பங்கொட்டையில்இருந்து வேப்ப எண்ணெய் தயாரிப்பதுபோல் வில்வ எண்ணெய் தயாரிக்கலாம். இதன் மரப்பட்டையிலிருந்து காகிதம் தயாரிக்கலாம். வில்வ பழத்தை சர்க்கரை கலந்து சாப்பிட்டால் மிகவும் ருசியாக இருக்கும். வில்வ பழச்சதைகள் தண்ணீரில் போட்டு

சர்க்கரை கலந்து சாப்பிடலாம். இதனை ஜுஸ் செய்தும் சாப்பிடலாம். வில்வ இலைகளிலிருந்து சாறு பிழிந்து ஒரு டம்ளர் தண்ணீரில் ஒரு தேக்கரண்டி அளவு சேர்த்து சாப்பிட்டால் ஜலதோஷம், காய்ச்சல் நீங்கும். மேலும் வில்வ இலைகளுடன் தண்ணீர் சேர்த்து அதனை காய்ச்சி, வடிகட்டி தினந்தோறும் அரை டம்ளர் சாப்பிட்டு வந்தால் ஆஸ்துமா, மலச்சிக்கல் ஆகிய நோய்கள் நீங்கிவிடும். இதன் பழச்சதையை எடுத்து தயிரில் கலந்து சாப்பிட்டால் வயிற்றோட்டம், வயிற்று கடுப்பு குணமாகும். இதன் சதையுடன் பசும்பால் கலந்து அரைத்து தலைக்கு தேய்த்து குளித்தல் கண் எரிச்சல், தலைச்சூடு தணிந்துவிடும். இதன் இலைகளை நிழலில் காயவைத்து பொடி செய்து அதனுடன் தேன் கலந்து சாப்பிட்டால் இருமல், தலைவலி ஆகியவை நீங்கிவிடும். வில்வப் பழம் குடலுக்கு வலிமையை கொடுக்கும். ஜீரணம் ஆகிவிடும். இவை அனைத்தும் உள்ள இந்த மரத்தை நாம் வீடுகளில் வளர்த்து பயன்பெறலாம். வீடுகளில் வேப்பமரத்தை நட்டு பயனடைவது போல வில்வமரத்தையும் நட்டு நாம் பயன்பெறலாம்.

டி.எம்.என்.தண்டபாணி, விவசாயம் தாத்தையங்கார்பேட்டை, திருச்சி-621 214.

## *தீபாவளி வரை, சர்க்கரை ஏற்றுமதிக்கு வாய்ப்பு இல்லை*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*நடப்பு ஆண்டில், தீபாவளி பண்டிகை முடியும் வரை சர்க்கரை ஏற்றுமதிக்கு மத்திய அரசு அனுமதி வழங்க வாய்ப்பில்லை என்று கூறப்படுகிறது. ஏற்றுமதிக்கு அனுமதி அளிக்கும் பட்சத்தில், பண்டிகை காலத்தில் சர்க்கரை விலை உயர்ந்து விட வாய்ப்புள்ளது. இதனால் ஏற்றுமதி மீதான தடை நீடிக்கும் என்று தெரிகிறது.*
*10 லட்சம் டன்*
*இந்திய சர்க்கரை ஆலைகள், சுமார் 10 லட்சம் டன் சர்க்கரையை ஏற்றுமதி செய்ய தயாராக உள்ளன. எனினும் நவம்பர் மாதம் வரை இவ்வாலைகள் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அம்மாதத்திற்குப் பிறகே மத்திய உணவு அமைச்சகம் ஏற்றுமதிக்கு ஒப்புதல் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.*
*எனினும் தென் மாநிலங்களைச் சேர்ந்த ஆலைகள் மத்திய அரசு உடனடியாக அனுமதி வழங்க வேண்டும் என எதிர்பார்க்கின்றன. தென்னிந்திய ஆலைகளுக்கு 6–7 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்யும் வகையில் ஒப்பந்தங்களைப் பெற்றுள்ளன. குறிப்பாக தென்கிழக்கு ஆசிய நாடுகளில் சர்க்கரைக்கான தேவைப்பாடு நன்கு உள்ளதால் இந்த ஆலைகள் ஏற்றுமதி மேற்கொள்வதில் மிகவும் ஆர்வமாக உள்ளன என சர்க்கரை*

*நிறுவனம் ஒன்றின் அதிகாரி ஒருவர் கூறினார்.*
*மதிப்பீடு*
*நடப்பு சர்க்கரை பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) நம் நாட்டில் 1.60 கோடி டன் சர்க்கரை உற்பத்தியாகும் என முன்பு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மறுமதிப்பீட்டில், இது 1.85 கோடி டன்னாக உயரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதிக்கு தடை உள்ள நிலையில், உற்பத்தி அதிகரித்து வருவதால் சர்க்கரை விலை குறைந்துள்ளது. புதுடெல்லியில், சென்ற ஜனவரி மாதத்தில் ஒரு கிலோ சர்க்கரை ரூ.50–ஐ எட்டியது. தற்போது, இதன் விலை ரூ.30 என்ற அளவிற்கு குறைந்துள்ளது.*

## காவை வேளாண் பல்கலைக்கழகத்தில் நெல்லிக்காய் பொருட்கள் தயாரிப்பு பயிற்சி

*கோவை, ஜூலை.14–*
*கோவையில் உள்ள வேளாண் பல்கலைக்கழகத்தில் நெல்லிக்காயில் இருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பது குறித்த பயிற்சி வருகிற 20 மற்றும் 21–ந் தேதிகளில் நடக்கிறது. இந்த பயிற்சியில் நெல்லிக்காய் பழரச பானம், தயார் நிலை பானம், நெல்லிக்காய் ஜாம், ஊறுகாய், ஊறுகனி மற்றும் உலரவைக்கப்பட்ட நெல்லிக்காய் தயாரிப்பது குறித்த பயிற்சி வழங்கப்படும்.*
*பயிற்சியில் கலந்து கொள்ள ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,000 மட்டும் செலுத்தி தங்களது பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம்.*
*நேரில் வந்து பெயரை பதிவு செய்து கொள்ள இயலாதவர்கள் கட்டணத் தொகை வரைவோலை மூலமாக முதல்வர், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், என்ற பெயரில் கோவையில் உள்ள பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்துமாறு எடுத்து, பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்பமையம், வேளாண் பல்கலைக்கழகம், கோவை என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.*
*இந்த தகவலை வேளாண் பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அலுவலர் ரவிக்குமார் தியோடர் தெரிவித்துள்ளார்.*

## பச்சை தேயிலைக்கு இருவகையான வார விலை நிர்ணயம்

*குன்னூர், ஜூலை.14–*
*பச்சை தேயிலைக்கு இருவகையான வார விலைகள் நிர்ணையிக் கப்பட்டு உள்ளன.*
*மலர் சாகுபடி*
*நீலகிரி மாவட்டத்தில் சுமார் 65 ஆயிரம் சிறு தேயிலை விவசாயிகள் உள்ளனர். இதன் காரணமாக நீலகிரி மாவட்டத்தின் பொருளாதாரம் தேயிலை தொழிலை சார்ந்து உள்ளது.*
*கடந்த 2000–ம் ஆண்டு ஏற் பட்ட தேயிலை விலை வீழ்ச்சி யினால் தமிழக அரசு மாற்று பயிர் திட்டத்தை அறிமுகப் படுத்தியது. ஆர்வமுள்ள ஒரு சில சிறு விவசாயிகள் வங்கி கடன் பெற்று மலர் சாகுபடி யில் ஈடுபட்டனர்.*
*விவசாயிகள் திண்டாட்டம்*
*ஆரம்பத்தில் லாபகரமாக அமைந்த மலர் சாகுபடி காலம் போகபோக சிறு விவசாயி களை நஷ்டத்துக்குள் தள்ளி யது. இதனால் மலர்களுக்கு போதிய விலை கிடைக்காமல்*

விவசாயிகள் திண்டாடும் நிலை ஏற்பட்டு வருகிறது. கடந்த 1½ ஆண்டு காலமாக தேயிலைக்கு நல்ல விலை கிடைத்து வந்தது. தேயிலை உற்பத்தி செய்யும் கென்யா, இலங்கை போன்ற நாடுகள் வறட்சியில் இருந்து மீண்ட தால் தேயிலை மகசூல் அதிகரித்தது. இதைத் தொடர்ந்து தேயிலை இறக்குமதி செய்யும் நாடுகளின் கவனம் கென்யா, இலங்கை பக்கம் திரும்பி உள்ளது.

தேயிலை தூள் தேக்கம்

இதன் எதிரொலியாக தென்னிந்திய தேயிலைக்கு குறிப்பாக நீலகிரி தேயிலைக்கு விலை வீழ்ச்சி ஏற்பட்டு வருகிறது. கடந்த சில மாதங் களாகவே தேயிலை ஏல மையத்தில் தேயிலை தூள் விற்பனையாகாமல் தேக்கம் அடைந்து வருகிறது.

இதன் காரணமாக தேயிலை விலை குறைந்து பச்சை தேயிலையின் விலையும் வீழ்ச்சி கண்டு வருகிறது.

அமைச்சர் அறிவுரை

இந்த நிலையில் தேயிலை வாரியம் அறிமுகப்படுத்தி உள்ள விலை பகிர்மான திட்டத்தின் படி பச்சை தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று தமிழக கதர்வாரிய துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் அறிவுரை வழங்கினார்.

அமைச்சர் கூட்டிய ஆலோசனை கூட்டத்தில் தேயிலை தொழிற்சாலைகள் தரப்பில் உள்ள குறைபாடுகளை தொழிற்சாலை உரிமையாளர் கள் கூறினர். தேயிலை தொழிலுக்கு தமிழக அரசு தேவையான உதவிகளை செய்யும் என்று அமைச்சர் கூறினார்.

இரு முறை விலை நிர்ணயம்

இருப்பினும் கடந்த 8, 9 ஆகிய தேதிகளில் குன்னூர் தேயிலை ஏல மையத்தில் நடைபெற்ற தேயிலை தூள் ஏலத்தில் 30 சதவீத தேயிலை தூள் விற்பனையாகாமல் தேக்கம் அடைந்து இருந்தது.

கடந்த 10–ந் தேதி சனிக் கிழமை வார விலையாக இரு விலைகள் நிர்ணயம் செய்யப் பட்டு உள்ளன. 7 ரூபாய் என்றும், ரூ.6.50 என்றும் ஒரு சில தொழிற்சாலைகளில் ரூ.5.50 என்றும் வார விலை நிர்ணயம் செய்யப்பட்டதாக சிறு விவசாயிகள் கூறி உள்ளனர்.

## வாழையுடன், சேனை பயிரிடுவதில் ஸ்ரீமதுரை விவசாயிகள் ஆர்வம்

கூடலூர்,ஜூலை.14–

கணிசமான வருவாய் பெற வாழையுடன் சேனை பயிரிடுவதில் ஸ்ரீமதுரை விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இஞ்சி விவசாயம் களைகட்டுகிறது

நீலகிரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை சீராக பெய்து வருகிறது. ஆண்டுதோறும் இப்பருவ காலத்தில் இஞ்சி விவசாயம் களை கட்டிவிடும். மாவட்டத்தில் கூடலூர், பந்தலூர் தாலுகா பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் இஞ்சி பயிரிடப்படுகின்றன. கூடலூர் அருகே ஸ்ரீமதுரை ஊராட்சியில் மலை பயிருடன், சமவெளி பிரதேச காய்கறிகளும் விளைவிக்கப் படுகின்றன. குறிப்பிட்ட பயிரை எதிர்பார்க்காமல் அதனுடன் ஊடுபயிரையும் நட்டு கணிசமான லாபம் பெறுவதில் கூடலூர் பகுதி விவசாயிகள் முன்னணி வகித்து வருகின்றனர். தேயிலை விவசாயத்தில் மட்டும் கவனம் செலுத்தி வந்த விவசாயிகள் தேயிலை விலை வீழ்ச்சியால் காய்கறி விவசாயத்தில் கவனம் செலுத்த தொடங்கினர்.

வாழையுடன், சேனை பயிரிடுவதில் ஆர்வம்
கூடலூர் பகுதியில் வாழை பயிரிடப்பட்டு வருகின்றன. இதில் ஊடுபயிராக சேனை, சேம்பு கிழங்குகளை பயிரிட்டுள்ளனர். இதனால் கூடுதல் வருமானம் கிடைக்கும் என விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர். மேலும் மரவள்ளி கிழங்கு செடிகளும் கணிசமான பரப்பளவு பயிரிடப்பட்டுள்ளது.
தற்போது வாழைக்காய், பழங்களுக்கு நல்ல விலை கிடைத்து வருவதால் வாழை விவசாயத்தில் விவசாயிகள் அக்கறை செலுத்தி வருகின்றனர்.
இதனால் அனைத்து வகை காய்கறிகளும் விளையும் பகுதியாக கூடலூர் விளங்கி வருகிறது என்பது மட்டும் உண்மையாகும்.

## வேளாண்மை ஆணையருக்கு விவசாயிகள் சங்கம் மனு

சோமனூர்,ஜூலை.14–
கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்கத்தின் கோவை மாவட்ட தலைவர் ஏ.கே.சண்முகம் சென்னை வேளாண்மை ஆணையருக்கு அனுப்பி உள்ள மனுவில் கூறியிருப்பதாவது:– மத்திய அரசின் 100 நாட்கள் வேலை உத்தரவாத திட்டத்தினால், விவசாய தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் விவசாய வேலைக்கு ஆட்கள் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் 50 ரூபாயும் அரசு 50 ரூபாயும் கொடுக்கும் வகையில் அரசு விவசாய பண்ணைகளுக்கு கூலிக்கு ஆட்களை அனுப்பி வைக்க வேண்டும். அல்லது இந்த திட்டத்தை முற்றிலுமாக விவசாய பணிக்கு மாற்றி அமைக்க வேண்டும். இதற் கான நடவடிக்கைகளை வேளாண்மைத்துறை எடுக்க வேண்டும்.
இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.